# அரசாணை (நிலை) எண்:7 கால்நடை,பால்வளம்,மீன்வளம்(AH2) துறை , நாள்:21.01.2017 நாளிட்ட அரசாணையின்படி ஜல்லிக்கட்டு நடத்திட தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள்

1. போட்டியில் கலந்து கொள்வோர் தொடர்புடைய வருவாய்த்துறையினரிடம் தங்களது பெயரினை பதிவு செய்ய வேண்டும். மேலும் தங்களது உடல் தகுதி குறித்து உரிய மருத்துவரிடம் சான்று பெற்று ஆஜர் செய்த பின்னரே, அவர்கள் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

2. போட்டியில் கலந்து கொள்ளும் மாடுகளுக்கு போதைப்பொருள் ஏதும் தரப்படவில்லை என்று கால்நடைத்துறையினரால் சான்றளிக்கப்பட வேண்டும். மேலும், அந்த மாடுகள் போட்டியில் கலந்து கொள்வதற்கு ஏதுவான உடல் தகுதி பெற்றுள்ளதா? என்பதனை பரிசோதித்து கால் நடை மருத்துவர் சான்றளிக்க வேண்டும்.

3. காளைக்கு ஏதேனும் நோய்கள் அல்லது காயங்கள் இருப்பதை கண்டறியப்பட்டால் அந்த காளைகளை ஜல்லிக்கட்டில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படவேண்டும்.

4. ஜல்லிக்கட்டில் பங்கேற்கும் காளைகள் களத்திற்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பு 20 நிமிடங்கள் ஓய்வளிக்கப்படவேண்டும்.

5. காளைகள் நிறுத்தப்படும் இடத்தில் அவற்றுக்கு இடையே 60 சதுரஅடி அளவில் போதிய இடைவெளி அளிப்பதுடன், பாதுகாப்பாக உணர காளையின் உரிமையாளர் அருகில் இருக்கவேண்டும்.

6. காளைகள் நிறுத்தப்படும் இடத்தில் மழை, வெயில் பாதிக்காமல் இருக்க கூடாரம் அமைத்திருக்க வேண்டும்.

7. ஜல்லிக்கட்டு நடைபெறும் பகுதியில் முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டு, நிகழ்வுகள் கண்காணித்து பதிவு செய்யப்படவேண்டும்.

8. பார்வையாளர்களும் சுற்றுப்புறத்தாரும் பாதிக்கப்படாத வகையில் உறுதியான மரக்கட்டைகள் கொண்டு இரண்டு அடுக்கு தடுப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

9. பார்வையாளர்கள் உட்கார்ந்து பார்ப்பதற்கு வசதியாக காலரி வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

10. காளையை அடக்குவோர் 15 மீட்டர் தூரத்திற்கு திமிலை மட்டுமே பிடித்துக்கொண்டு செல்லவேண்டும். வால் மற்றும் காது போன்றவற்றைப் பிடிக்கக்கூடாது.

11. போட்டி நடைபெறும் இடத்தில் ஏதேனும் அசம்பாவிதம் நடைபெறும் பட்சத்தில், உடனடி சிகிச்சை அளிக்கும் பொருட்டும், மருத்துவர்களும், ஆம்புலென்சும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

12. போதுமான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி சம்மந்தப்பட்ட உள்ளூர் ஊராட்சி அமைப்புகளால் ஏற்படுத்தி தரப்பட வேண்டும்.

13. போட்டியில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு தனியே குறிப்பிட்ட வண்ணத்தில் சீருடை வழங்கப்பட வேண்டும்.

14. காலரி வசதி, மருத்துவம், குடிநீர், சுகாதாரம், தடுப்பு அமைப்பு, பாதுகாப்பு போன்ற வசதிகளை மேற்பார்வையிட துணை ஆட்சியர் நிலையில் பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியரை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

15. கண்காணிப்பு பொறியாளர்,தமிழ்நாடு மின்சார வாரியம், பெரம்பலூர் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் போதுமான அளவு மின் விளக்குகள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

16. பெரம்பலூர் கோட்ட தீயணைப்பு அலுவலர் ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்தில் தீயணைப்பு வண்டிகளை நிறுத்த ஏற்பாடு செய்திடல் வேண்டும்.

17. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியானது காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 5.00 மணிக்குள் முடித்துவிட வேண்டும். மாலை 5.00 மணிக்கு மேல் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாது.

18. ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்தில் 8 அடி உயத்திற்கு பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் கேலரி (Gallery) மற்றும் இரண்டு அடுக்கு தடுப்புகளையும் பரிசோதித்து அதன்உறுதிதன்மையை சான்றாக வழங்கப்பட வேண்டும். எவ்வளவு எண்ணிக்கையில் பார்வையாளர்கள் உட்கார்ந்து பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும் என்ற விபரமும் தெரிவிக்கப்பட வேண்டும்.